வடசிறுவளூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி.P.செல்வி

ந.க.எண்.01/2024 நாள்:08.06.2024

பொருள்: மனைப்பிரிவு, ஓலக்கூர் ஊராட்சி ஒன்றியம், வடசிறுவளூர் ஊராட்சி (ம) கிராம சர்வே எண்.45/7 ஏக்கர் 1.11 (அ) 4500 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் - சார்பு.

படிக்க: 1. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றம் நகர்புற வளர்ச்சித் (UD(3)) துறை நாள்.23.09.2020.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், விழுப்புரம் மாவட்டம், அவர்களின் ந.க.எண். ./TAJ2D4IG/2024TCP நாள்.-----

3. வடசிறுவளூர் ஊராட்சி தீர்மான எண்.131 நாள்.08.06.2024

4. தானபத்திரம் எண்.1669/2024 நாள்.09.05.2024

5. ஸ்டேப் பாங்க் ஆப் இந்தியா - விழுப்புரம் கருவூலம் (ம) இந்தியன் பாங்க் - வெள்ளிமேடுபேட்டை கிளை செலுத்துச்சீட்டு நாள்.08/06/2024.

உத்தரவு:

ஓலக்கூர் ஊராட்சி ஒன்றியம், வடசிறுவளூர் ஊராட்சி (ம) கிராமம், சர்வே எண்.45/7 ஏக்கர் 1.11 (அ) 4500 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாக வரன்முறைப்படுத்திட, பார்வை (1)-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை (2)-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மாவட்டம, அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை (3)-ல் (ம) 4-ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் தானபத்தரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்யு செய்து மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த அனுமதி வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை (5)-ல் காணும் விவரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் அதற்குண்டான கட்டணம் ரூபாய்.7,000/- மற்றும் கூராய்வு கட்டணம் ரூபாய்.31,000/- (31 * 1000) இந்தியன் பாங்க் வெள்ளிமேடுபேட்டை கிளை வாயிலாக கணக்கு எண்.7393165259 செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சம்ர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைப்பு - 021760800AS22709

வ.எண்	விஸ்தீரணம்	சார்பதிவாளர் சந்தை மொத்த மதிப்பு ரூ.(ச.மீ)	3% நில மாற்று கட்டணம் ரூபாய்
1.	1.11 ஏக்கர் (அ) 4500 சதுர மீட்டர் 45/7-3005.87 ச மீ	74	7000/-

ரூ.7,000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்)

நிபந்தனைகள்:-

1.நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழகப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெறவேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்காக இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

4. மேற்படி புதிய மனைப்பிரிவில் தார் சாலை, பூங்கா, உள்ளாட்சி -A (ம) மின்சார துறை -B ஆகியன தானமாக அவரப்பாக்கம் சார்பதிவாளர் ஆவண எண்.1669/2024 நாள்.09.05.2024-ன்படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

5. மேற்படி புதிய மனைப்பிரிவில் தார்சாலை, தெருக்களின் பெயர் பலகைகள், மனையின் உயர் மின்னழுத்த கம்பிகள் செல்லுமாயின் அதனை மேற்படி மனை உரிமையாளர் தனது சொந்த செலவில் செய்துக்கொள்ளவேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வடசிறுவளூர் ஊராட்சி (ம) கிராமம், சர்வே எண்.45/7 - ஏக்கர் 1.11 செண்டு (அ) 4500 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள 31 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

P.வசந்தி
தலைவர்
வடசிறுவளூர் ஊராட்சி

தலைவர்
வடசிறுவளூர் ஊராட்சி
ஓலக்கூர் ஒன்றியம்.

பெறுநர்:

திருமதி.சிவகாமி

நெ.36, 37 உருவையர் மெயின் ரோடு,

அண்ணாமலை நகர்,

வில்லியனூர், கொம்யூன்,

புதுச்சேரி - 605 110

நகல்:- வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) ஓலக்கூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:- உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:- சார்பதிவாளர் அவரப்பாக்கம்,

நகல்:- வட்டாட்சியர் திண்டிவனம்.